# இலக்கணக்குறிப்பு – SHORT NOTES

4CARE ACADEMY

**1. வியங்கோள் வினைமுற்று**

- ✓ க, இய, இயர் என்பதில் முடிவது.
- ✓ எ.கா: வாழ்க, பொழிக, வாழியர், வாழிய.

**2. பண்புத்தொகை**

- ✓ இரண்டு சொற்களுக்கு இடையே ‘ஆகிய' பண்புருபு மறைந்து வருவது.
- ✓ வடிவம், பண்பு,சுவை, எண் பற்றி வரும்.
- ✓ பிரித்தால் ‘மை' விகுதி இடம் பெறும்.
- ✓ எ.கா: பெரும்படை, இருநிதி, நறுஞ்சுவை.

**3. தொழிற்பெயர்**

- ✓ தல், அல், அம், கை, ஐ, சி, பு என்பதில் முடிவது தொழிற்பெயர்.
- ✓ எ.கா: பாடுதல், ஓட்டம்

**4. உரிச்சொல் தொடர்**

- ✓ சால, தவ, தட, நனி, மல்லல், மா, கூர், மழ, குழ, கடி, கழி, உறு, வை முதலிய உரிச்சொற்களில் தொடங்கினால் உரிச்சொல் தொடர்.
- ✓ எ.கா: மாஞாலம், தவச்சிறிது, தடக்கரி, மல்லலம் குருத்து, கடிநகர், வைவேல்.

4CARE ACADEMY

**5. பெயரெச்சம்**

- ✓ சொல் 'அ' வில் முடிந்தால் பெயரெச்சம்.
- ✓ எ.கா: உண்ட சாத்தன், வந்த பசு.

**6. வினையெச்சம்**

- ✓ சொல் 'உ' அல்லது 'இ' என்பதில் முடிந்தால் வினையெச்சம்.
- ✓ எ.கா: வந்து சென்றான், ஆடி முடித்தான்.

**7. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்**

- ✓ .... ஆ' வில் முடியும். முடிவு பெறாமல் இருக்கும் அது ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
- ✓ எ.கா: வேண்டா குப்பை, ஓடா குதிரை, தீதிலா வடமீன்.

4CARE ACADEMY

**8. வினையாலணையும் பெயர்**

- ✓ வினையைச் செய்தவனுக்கு அடைமொழியாக வரும் வன், வர், ஆர், ஆன், அன், ஆர், ஓர் ஆகியவற்றில் முடிவது வினையாலணையும் பெயர்.
- ✓ எ.கா: ஓடியவன், வந்தார், கொண்டோர். இரட்டைக்கிளவி

**9.  இரட்டைக்கிளவி**

- ✓ இரட்டைச் சொல் பிரித்தால் பொருள் தராது. அது இரட்டைக்கிளவி.
- ✓ எ.கா: படபட, தகதக, சடசட, பளபள.

**10. அடுக்குத்தொடர்**

- ✓ இரண்டு அல்லது மூன்று முறை அடுக்கி வரும். பிரித்தால் பொருள் தரும். அது அடுக்குத் தொடர்.
- ✓ எ.கா: போபோ, தீதீதீ, வருக வருக.

**11.வினைத்தொகை**

- ✓ மூன்று காலத்தையும் மறைமுகமாகக் காட்டுவது வினைத்தொகை.
- ✓ எ.கா: கொல்யானை, (கொல்கின்ற யானை, கொல்லும் யானை, கொன்ற யானை), குவி மொட்டு

**12. ஒருபொருட்பன்மொழி**

- ✓ ஒரே பொருளைக் குறிக்க வேறு சொற்கள் வரும். அது ஒருபொருட்பன்மொழி.
- ✓ எ.கா: ஒரு தனி (ஒரு-ஒன்று, தனி-ஒன்று), ஓங்கியுயர்ந்த, பிறைக்கூன்.

4CARE ACADEMY

**13. உவமைத்தொகை**

- ✓ "போல', 'போன்ற' ஆகிய உவம உருபுகள் மறைந்து வரும். அது உவமைத்தொகை.
- ✓ எ.கா: மலர்முகம் (மலர் போன்ற முகம்), கயல்விழி, பவள வாய்.

**14. உருவகம்**

- ✓ 'ஆகிய' என்ற சொல்லுருபு மறைந்து வரும்.
- ✓ உவமையின் தன்மையைப் பொருளின் மீது ஏற்றிக் கூறுவது உருவகம்.
- ✓ எ.கா: வாழ்க்கைப்போர் (வாழ்க்கையாகிய போர்), பிறவி இருள், ஒளியமுது.

**15. உம்மைத்தொகை**

- ✓ தொடர்புடைய இருசொற்களில் 'உம்' என்ற இடைச்சொல் மறைந்து வருவது உம்மைத்தொகை.
- ✓ எ.கா: வில் வாள் (வில்லும் வாளும் தொடர்புடைய போர்க் கருவிகள். 'உம்' மறைந்து வந்துள்ளது) , காசுபணம்

**16. எண்ணும்மை**

- ✓ தொடர்புடைய இருசொற்களில் 'உம்' என்ற இடைச்சொல் வெளிப்டையாக வருவது உம்மைத்தொகை.
- ✓ எ.கா: வாயிலும் சன்னலும்

**17. சொல்லிசை அளபெடை**

மூன்று மாத்திரை அளவில் வினையெச்சப் பொருளில் வரும் அளபெடை

இது 'இ' என்று எழுத்துடன் முடியும்.

எ.கா: ஓரீஇ, நம்பெழீஇ, உரனசை இ.

4CARE ACADEMY

**18. இன்னிசை அளபெடை**

- மூன்று மாத்திரை அளவில் மூன்று அசைச் சொற்களில் அமைவது இன்னிசை அளபெடை
- எ.கா: உண்பதூம் (உண்/பதூ/உம்) உடுப்பதூஉம்.

**19. செய்யுளிசை அளபெடை**

- மூன்று மாத்திரை அளவில் இரண்டு அசை சொற்களில் அமைவது செய்யுளிசை அளபெடை
- எ.கா: ஆஅதும், கழுஉமணி, படாஅபறை, தொழூா அர்.

**20. வேற்றுமைத் தொகை**

- இணைந்த தொகைச் சொல்லை விரித்தால் இடையில் வேற்றுமை உருபுகளில் (ஐ, ஆல், இன், கு, அது, கண்) ஏதேனும் ஒன்று மறைந்திருப்பது.
- எ.கா: கூலி வேலை (கூலிக்கு வேலை).

**21. அன்மொழித் தொகை**

- ஆகுபெயர் போல் ஒரு தொகைச் சொல் வேறு அல்லாத ஒன்றைக் குறிப்பது அன்மொழித் தொகை
- எ.கா: செந்தாமரை (பண்புத் தொகை) , செந்தாமரை வந்தாள் (அன்மொழித்தொகை)

4CARE ACADEMY

**22. தன்மை பன்மை வினைமுற்று**

- ✓ அம் ஓம் என்ற விகுதிகளுடன் முடிவது
- ✓ எ.கா: போற்றுதும்.

**23. செய்யும் என்னும் வாய்ப்பாட்டு வினைமுற்று :**

- ✓ செய்யும் என்ற சொல்லைப் போன்றே தொனிப்பது
- ✓ எ.கா: படும்.

**24. செயின் என்னும் வாய்ப்பாடு வினைமுற்று**

- ✓ செயின் என்ற சொல்லைப் போன்றே தொனிப்பது.
- ✓ எ.கா: பெறின்.

**25. ஆகுபெயர்**

- ✓ ஒன்றின் இயற்பெயர் மற்றொன்றுக்கு ஆகி வருவது.
- ✓ எ.கா: உலகு (உலக மக்களைக் குறிக்கும்), ஊர் சிரித்தது.

**26. முதல் நிலை திரிந்த தொழிற்பெயர்**

- ✓ ஒரு தொழிற்பெயரின் விகுதி கெட்டு, முதல் எழுத்தும் மாறி ஒலிப்பது

எ.கா: கெடுதல்.

- ✓ கெடுதல் – கெடு - கேடு
- ✓ பெறுதல் – பெறு – பேறு

4CARE ACADEMY

**27. இலக்கணப் போலி**

- ஓர் இலக்கண அமைப்புடைய சொல்லுக்கு போலியாக அமைவது
- எ.கா: தசை (சதை)

**28. எழுத்துப் போலி**

- ஒரு சொல்லில் எழுத்து மாறினாலும் பொருள் மாறாது.
- இது முதல், இடை, கடைசியில் அமையும். முற்றிலும் மாறுபட்டு அமையும்.
- எ.கா: நலன் (நலம்) கடைப்போலி,
- அஞ்சு (ஐந்து) முற்றுப்போலி

**29. மருஉச் சொல்**

- காலப்போக்கில் மருவி மாறி வருபவை
- எ.கா: எந்தை (என் தந்தை )
- பேர் (பெயர்)

**30. இடைக்குறை விகாரம்**

- ஒரு சொல்லின் இடையில் ஓர் எழுத்து குறைந்து மாறுபட்டாலும் அதே பொருளைத் தருவது ..
- எ.கா: உளம் (உள்ளம்), கணீர் (கண்ணீ ர்)

4CARE ACADEMY

**31. இரு பெயரொட்டுப் பண்புத் தொகை**

- ✓ இரு சொற்களில் முதல் சொல் சிறப்புப் பெயராகவும் அடுத்துள்ள சொல் பொதுப் பெயராகவும் இருப்பது.
- ✓ எ.கா: தமிழ்மொழி, இமயமலை.

**32. தன்மை ஒருமை வினைமுற்று**

- ✓ என், ஏன் என்ற விகுதிகளுடன் முடிவது
- ✓ எ.கா: கொள்வேன்.

**33. முற்றெச்சம்**

- ✓ ஒரு வினைமுற்றுச் சொல் வினையெச்சப் பொருளில் வந்து மற்றொரு வினைமுற்றைக் கொண்டு முடியும்.
- ✓ எ.கா: படித்தனன் தேறினான்.

4CARE ACADEMY